**JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU**

**CC No. 408/2019**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW- 2 |
| Name | : திரு. மணிகண்டன் |
| Father/Husband's Name | : சபாபதி |
| Village | : நெ.63, மாரியம்மன் கோயில் தெரு |
| Taluk | : உத்திரமேரூர் |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 34 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.08.2024.

Accused present.

**முதல் விசாரணை–**

நான் தற்போது சீத்தாவரம் கிராமத்தில் வசித்து சாவித் என்ற ஒரு தனியார் நிறுவனத்தில் பணிபுரிகிறேன். கடந்த 22.08.2018 அன்று சுமார் காலை 11.00 மணியளவில் ஹோண்டா ஸ்கூட்டி TN 19 AV 6050 என்ற இருசக்கர வாகனத்தில் காமேஷ் என்பவர் திம்மாவரத்தை நோக்கி காஞ்சிபுரம் ஹைரோட்டில் சென்று கொண்டிருந்த போது போன் பேசிக்கொண்டு வாகனத்தை ஓட்டி வந்து அவரே தடுமாறி கீழே விழுந்துவிட்டார். நான் வேலை பார்க்குமிடம் காஞ்சிபுரம் ஹைரோட்டில் உள்ள நத்தத்தில் உள்ளது. போன் பேசிக்கொண்டு வரும் போது காமேஷ் கீழே விழுந்துவிட்டார் எதிரே வந்த இருசக்கர வாகனத்தின் பம்பர் காமேஷின் தலையில் இடித்தது. இடித்த அந்த இருசக்கர வாகனத்தின் எண் தெரியாது. காயம்பட்ட காமேஷை ரோட்டின் ஓரம் தூக்கி வைத்து ஆம்புலன்சிற்கு தகவல் சொல்லி அவரை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். அன்றைய தினம் மாலை 3 போலிசார்

கடைக்கு வந்து என்னிடம் நடந்த விவரத்தை விசாரித்தார்கள் நான் கூறினேன். அவர்கள் எழுதி கொண்டார்கள் படித்து பார்த்து கையெழுத்து செய்தேன். காமேஷ் மீது இடித்த இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபரை பார்த்தேனா என்றால் இல்லை. வேறு யார் இருந்தார்கள் என்பது பற்றி தெரியாது. போலிசார் என்னை விசாரித்தனர்.

**இந்த சாட்சியை பகுதியாக பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கோரி அனுமதி அளிக்கப்பட்டது.**

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

காஞ்சிபுரம் ஹைரோட்டில் தான் நான் வேலை பார்க்கும் இடம் உள்ளது என்றால் சரிதான். காமேஷ் நிலை தடுமாறி கீழே விழுந்துவிட்டார்என்று சொன்னால் சரிதான். அதன் பிறகு தான் எதிரே வந்த இருசக்கர வாகனத்தின் பம்பர் இடித்தது. விபத்து ஏற்படுத்திய வாகனம் கன்ரோல் இல்லாமல் வேகமாக வந்து காமேஷை இடித்தது என்றால் சரிதான். காமேஷை இடித்த வண்டி தான் விபத்திற்கு காரணம் என்றால் சரிதான். கமலேஷ் கீழே விழுந்த பிறகு தான் அந்த இருசக்கர வாகனம் வந்து இடித்தது. இந்த விபத்து ஏற்படுத்திய வாகனம் TN 19 Q 9313 யமகா ரே என்றால் வண்டி எண் பார்க்கவில்லை வண்டியின் பெயர் யமகா ரே. அடிப்பட்டவரையும், விபத்து ஏற்படுத்தியவரையும் நான் பார்த்தேன் என்றால் இல்லை அடிப்பட்டவரை மட்டும் தான் நான் பார்த்தேன். விபத்துக்கு பிறகு விபத்து ஏற்படுத்திய வாகனம் என்ன ஆனது என்றால் காவல் நிலையத்திற்கு எடுத்து செல்லப்பட்டது.

எனது போலிஸ் விசாரணையில் நான் வாகன எண்ணையும், வாகனத்தை ஓட்டி வந்து விபத்து ஏற்படுத்திய வாகனத்தையும் பார்த்ததாக கூறிவிட்டு தற்போது ஆஜர் எதிரியை அடையாளம் தெரியாது என்றும், அரசு தரப்பிலிருந்து விலகி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் பார்க்கவில்லை அவர் ஹெல்மெட்ட அணிந்திருந்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை–** இல்லை.

**மறுவிசாரணை–** இல்லை.

Typewritten to my dictation in open
court read over to the witness in Tamil
in the presence of the accused and
admitted by the witness to be correct.

Sd.xxx V.Lavanya
Judicial Magistrate No.I,
Chengalpattu.

**JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU**

**CC No. 408/2019**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW- 3 |
| Name | : திரு. ரமேஷ் |
| Father/Husband's Name | : கண்ணன் |
| Village | : நெ.67, காஞ்சிபுரம் ஹைரோடு |
| Taluk | : செங்கல்பட்டு |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 40 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.08.2024.

Accused present.

**முதல் விசாரணை–**

நான் தற்போது செங்கல்பட்டில் வசித்து ஜேஎஸ்பி மருத்துவமனை அருகில் கூல்ரிங்க்ஸ் கடை வைத்துள்ளேன். கடந்த 22.08.2018 அன்று காலை சுமார் 11.00 மணியளவில் காஞ்சிபுரம் ஹைரோட்டில் சாவிக் என்கிற கடை எதிரே செங்கல்பட்டிலிருந்து திம்மாவரம் சென்று கொண்டிருந்த ஸ்கூட்டி 6050 என்ற வாகனத்தில் சென்றுகொண்டிருந்தவர் கீழே விழுந்துவிட்டார் அவர் விழுந்தவுடன் எதிரே வந்த இருசக்கர வாகனமான யமகா எண் தெரியவில்லை கீழே விழுந்தவர் மீது வேகமாக வந்து தலையில் இடித்துவிட்டது. விபத்துக்கு காரணம் யார் என்று கேட்டால் இருசக்கர வாகனத்தில் வந்தவர் விழுந்ததால் தான் எதிரே வந்த வாகனம் இடித்தது. விபத்தை ஏற்படுத்தியவரை பார்த்தால் அடையாளம் காட்ட முடியுமா என்றால் இல்லை. போலிசார் என்னை இவ்வழக்கு சம்மந்தமாக விசாரித்தனர்.

**இந்த சாட்சியை பகுதியாக பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கோரி அனுமதி அளிக்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

இவ்வழக்கில் முதலில் கீழே விழுந்தவரின் இருசக்கர வாகனத்திற்கு எதிரே வந்த வாகனம் பிரேக் போட்டிருந்தால் வாகனத்தை நிறுத்தியிருக்கலாம் வேகமாக வந்ததால் தான் அவ்வாறு செய்யமுடியாமல் இடித்துவிட்டது என்றால் நான் அவ்வாறு கவனிக்கவில்லை. எதிரே வந்த வாகனம் வேகமாக வந்து இடித்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். நான் சம்பவம் நடந்த இடத்தில் விபத்து ஏற்படுத்தியவரையும், காயமடைந்தவரையும் பார்த்தேன் என்றால் நான் விபத்து ஏற்படுத்தியவரை பார்க்கவில்லை காயமடைந்தவரை தான் பார்த்தேன்.

எனது போலிஸ் விசாரணையில் சம்பவத்தன்று சம்பவயிடத்தில் உள்ள வாகனத்தையும், வாகன எண்ணையும், வாகனத்தை ஓட்டி வந்து விபத்து ஏற்படுத்திய வாகனத்தையும் பார்த்ததாக கூறிவிட்டு தற்போது ஆஜர் எதிரியை அடையாளம் தெரியாது என்றும், அரசு தரப்பிலிருந்து விலகி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை–** இல்லை.

**மறுவிசாரணை–** இல்லை.

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd.xxx V.Lavanya
Judicial Magistrate No.I,
Chengalpattu.

**JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU**

**CC No. 408/2019**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW- 4 |
| Name | : திரு. செல்வராஜ் |
| Father/Husband's Name | : துரைக்கண்ணு |
| Village | : விருச்சூர் |
| Taluk | : காஞ்சிபுரம் |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 46 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.08.2024.

Accused present.

**முதல் விசாரணை–**

நான் தற்போது விருச்சூரில் வசித்து விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த 22.08.2018 அன்று காலை சுமார் 11.00 மணியளவில் இருசக்கர வாகனத்தில் சென்ற காமேஷிற்கு விபத்து ஏற்பட்டது. நான் ரிஜிஸ்டார் அலுவலகத்தில் நின்று கொண்டிருந்தேன் அனைவரும் கத்திய சத்தம் கேட்டது சென்று பார்த்த போது எனது மாமா மகன் காமேஷிற்கு விபத்து ஏற்பட்டிருந்தை பார்த்தேன். இருசக்கர வாகனம் மோதி விபத்து நடந்ததாக தெரிந்து கொண்டேன். நான் அந்த இடத்திற்கு சென்ற பிறகு தான் அடிப்பட்டவர் எனது மாமா மகன் என்று தெரிந்து கொண்டேன். அவரை நான் தூக்கி நிறுத்திவிட்டு பிறகு ஆம்புலன்சிற்கு தெரிவித்து அவரை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். எனது மாமா மகனை இடித்த வாகனத்தின் ஓட்டுநரை நான் பார்த்தேனா என்றால் இல்லை. இடித்தவர் யார் என்று எனக்கு தெரியவில்லை நிறைய பேர் அங்கிருந்தனர். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட எனது மாமா மகன் 2, 3 நாட்கள் கழிதது இறந்துவிட்டார். அவர் இறப்பிற்கு காரணம் இந்த விபத்து தான்.

போலிசார் என்னை இவ்வழக்கு சம்மந்தமாக விசாரித்தனர்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை–** இல்லை.

**மறுவிசாரணை–** இல்லை.

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd.xxx V.Lavanya
Judicial Magistrate No.I,
Chengalpattu.